DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**OS.No. 25 /2019**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | சூரியநாராயணன் | தந்தை பெயர் – | ராமலிங்கம் |
| Age | | Village – | தேனி. |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.12.2024.

**2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1) என் முன்பு காட்டப்படும் 20.12.2000–ம் தேதியிட்ட பவர்பத்திரமானது என் பெயருக்கு வாதியின் தகப்பனார் ஆங்கத்தேவர் எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான், (**இந்த ஆவண எண். 6/2000–பொது அதிகார பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆங்கத்தேவர் மகன் ரவி என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2) பி.வா.சா.ஆ.1 பொதுஅதிகார ஆவணத்தின் அடிப்படையில் நான் 03.02.2011–ம் தேதியன்று 2ம் பிரதிவாதியின் பெயருக்கு கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் தற்போது என் முன்பு காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணம் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.7 ஆவணத்தை ஏற்படுத்திகொடுத்த சமயத்தில் அச்சொத்தின் சுவாதீனம் யார் வசம் இருந்தது என்றால் என்வசம்தான் இருந்தது.

3) என் முன்பு காட்டப்படும் ஆவணமானது 20.12.2000–ம் தேதியிட்ட ஆங்கத்தேவரால் என் பெயருக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் என்றால் சரிதான். இந்த ஆவணத்திற்கு நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் நான் குறைமதிப்பீட்டிற்கான முத்திரைத்தீர்வை செலுத்த தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். (20.12.2000–ம் தேதியிட்ட

மேற்படி பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தை குறியீடு செய்யுமாறு 2ம் பிரதிவாதி தரப்பில் வேண்டப்பட்டது. வாதி தரப்பில் மேற்படி கிரைய ஆவணத்தை வாதியின் தகப்பனார் ஏற்படுத்தியே கொடுக்கவில்லை என்றும், மேற்படி ஆவணம் போலியான ஆவணம் என்றும் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதாலும், இதனை குறியீடு செய்ய ஆட்சேபிப்பதாக தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணை பதிவு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் நிலைத் தன்மையை அதன் பதிவு மற்றும் முத்திரைத்தீர்வை செலுத்தப்படாமை ஆகியவை குறித்து ஆட்சேபணை செய்திருப்பதால், மேற்படி ஆட்சேபணை குறித்து தீர்மானிப்பதற்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Sd./திரு.C.ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
போடிநாயக்கனூர்.